22.06.2022
O.S.No.50/2018

P.W.2 -Manivannan

<u>கு.வி.</u>

என்னுடன் இந்த வழக்கின் வாதி அய்யாச்சாமியும் உடன் வந்திருக்கிறார் என்றால் சரிதான். அவர்தான் என்னை அழைத்துக்கொண்டு வந்தார். நான் அய்யாச்சாமிக்கு உறவினரா அல்லது அவரது சமூகத்தைச் சேர்ந்தவரா என்றால் நான் வேலம்பட்டி கிராமத்தில் டீக்கடை வைத்துள்ளேன். நத்தம் கோவில்பட்டிக்கும் வேலம்பட்டி கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1.1/2 கி.மீ. இருக்கும். நான் என்னுடை வாக்குமூலத்தில் நான் என்ன வேலை பார்க்கிறேன், நான் வேலம்பட்டியில் டீக்கடை வைத்திருக்கிறேன் என்ற விவரங்களை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் வாதி நத்தம் கைலாசநாதர்கோவில் அருகில் அய்யாச்சாமி குடோன் வைத்திருக்கிறார் என்றால் அவர் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறார் என்ற விவரம் தெரியும். ஆனால் அவர் குடோன் வைத்து செய்கிறாரா என்றால் தெரியாது. தேங்காய் வியாபாரம் அவர் எங்கு வைத்து செய்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுத்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொன்ன விவரங்கள் அடிப்படையில்தான் தயார் செய்யப்பட்டது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எங்கு வைத்து கையொப்பம் செய்யப்பட்டது என்று நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அய்யாச்சாமியின் வீடு எங்கு இருக்கிறது என்றால் வேலம்பட்டியில் உள்ளது. இவ்வழக்கின் பிரதிவாதி குடியிருக்கும் இடம் சமுத்திராபட்டி கிராமம் என்றால் சம்மம்பட்டியில் குடியிருக்கிறார். அய்யாச்சாமி என்பவரை எனக்கு கடந்த 10 வருட காலங்களாக தெரியும். அழகு என்பவரும் அவருடன் ஒன்றாக வருவார், போவார். பிரதிவாதி வாதிக்கு தேங்காய் சப்ளை செய்கிறாரா என்றால் அவர்கள் இருவரும் என்ன செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. என்ன மதிப்புடைய நோட்டுக்களை கொடுத்து பணப்பரிமாற்றம் செய்துகொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் 1000, 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்து பணப்பரிமாற்றம் செய்துகொண்டார்கள். எவ்வளவு ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் எவ்வளவு ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் கொடுத்து பணப்பரிமாற்றம் செய்துகொண்டார்கள் என்றால் ஞாபகமில்லை. எனக்கு சாட்சி கையொப்பம் இடுவது தொழில் கிடையாது. அய்யாச்சாமி அழைத்தன் பேரில் நான் அவர் வீட்டுக்கு சென்றேனா என்றால் இருவருமே அழைத்தார்கள். எந்த தேதியில் அழைத்தார்கள் என்றால் 2015 ஆகஸ்ட் 26ம் தேதிஅழைத்தார்கள். எவ்வளவு நாட்களாக அய்யாச்சாமியிடம் அழகு பணம் கேட்டுக்கொண்டிருந்தார் என்றால் சுமார் 3 மாத காலமாக கேட்டார். அந்த விவரம் எனக்கு நேரிட்டு தெரியும் என்றால் சரிதான். சுமார் 3 மாத காலங்களாக அய்யாச்சாமியிடம் அழகு பணம் கேட்டுக்கொண்டிருந்தார் அந்த விவரம் எனக்கு

தெரியும் என்று நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எந்த விவரமும் கூறவில்லை என்றால் சரிதான். பத்திரத்தை வாங்கிக்கொண்டு வந்தவர் அழகு. அதை எழுதியவர் சுந்தர்பாபு என்பவர் எழுதினார். சுந்தர்பாபு ஆவண எழுத்தர் அல்ல என்றால் சரிதான். நான், சுந்தர்பாபு, செல்லையா ஆகிய மூவரும்தான் வாதி வீட்டில் இருந்தோம். யார் அந்த இரண்டு சாட்சிகளை அழைத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அழகு யாரிடமும் எந்தக் காலத்திலும் கடன் எதுவும் கேட்கவும் இல்லை, கடன் பெற்றுக்கொள்ளவும் இல்லை, அவர் கடன் பெற்றுக்கொண்டதாகவும், எங்கள் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுமார் 10, 15 வருடங்களாக அய்யாச்சாமி தேங்காய் வியாபாரம் செய்கிறார். அவருக்கு சொந்தமாக தோப்புக்கள் எதுவும் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. அவர் பெயரில் எந்தவிதமான அசையும், அசையா சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவர் தொகையை வீட்டில் வைத்திருந்தாரா அல்லது வங்கியில் இருந்து எடுத்து வந்தாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் போனதற்கு பின்னிட்டுதான் தொகை கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அய்யாச்சாமி வருமானவரி கட்டுகிறாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அழகிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், தொழில் செய்வதற்காகவும், கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காகவும்தான் கடன் தொகை கேட்டார். மேற்சென்ன அனைத்து விவரங்களையும் கண்டுதான் கடன் உறுதிச் சீட்டு எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாதசாஆ.1 ல் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், தொழில் செய்வதற்காகவும், கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காகவும்தான் கடன் பெற்றதாக எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி தாமே கூறுகிறார் தொழில் என்று மட்டுமே விவரம் காணப்படுகிறது. அய்யாச்சாமி என்னிடம் அழகு என்னிடம் எந்த பணமும் பெற்றுக்கொள்ளவில்லை என்று கடன் உறுதிச் சீட்டை மறுக்கிறார், அதில் உள்ள கையொப்பத்தையும் மறுக்கிறார் ஆகவே நீங்கள் அது சம்மந்தமாக வரவேண்டியிருக்கும் என்று என்னிடம் வாதி கூறினார். நாளது வரை இந்த கையெழுத்து பிரதிவாதியுடையதுதான் என்று காட்ட அய்யாச்சாமி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் உண்மைதான். நான் எத்தனை மணிக்கு கடனுறுதிச் சீட்டில் கையொப்பம் இட்டேன் என்றால் காலை 11ல் இருந்து 12 மணியிருக்கும். குறிப்பிட்டு நேரம் தெரியவில்லை. கைலாசநாதர் கோவில் அருகில் வாதி அய்யாச்சாமி குடோன் என்ற பெயரில்தான் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் அவர் தேங்காய் வியாபாரம் செய்கிறார். ஆனால் அதற்கு குடோன் இருக்கிறதா என்று தெரியாது. பிரதிவாதிக்கு தேங்காய் தோப்பு இருக்கிறரா என்றால் எனக்கு தெரியாது. சாட்சி தாமே கூறுகிறார் அவர் தேங்காய் வியாபாரம் செய்கிறார் என்று தெரியும். அழகு தேங்காய் கொள்முதல் அதனை வாதிக்கு சப்ளை செய்து வந்தார், நாளடைவில் அவர்

பல நபர்களுக்கு தேங்காய் சப்ளை செய்ய முற்பட்ட காரணத்தினால் காழ்ப்புணர்ச்சி கொண்டு வாதி இந்த கடனுறுதிச் சீட்டை தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறார் என்றால் பொய். வாதியால் தயார் செய்யப்பட்ட கடனுறுதிச் சீட்டிற்கு நாங்கள் உறுதுணையாக இருந்துள்ளோம் என்றால் அது பொய். வாதசாஆ.1 ல் உள்ள கையொப்பமானது பிரதிவாதியினுடையது இல்லை என்பதால்தான் அந்த ஆவணத்தை நிரூபிக்கும் விதமாக எந்த முயற்சியும் வாதி தரப்பில் எடுக்கப்படவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு ஆதரவாக அவர் அழைத்தன் பேரில் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் அது பொய். வாதசாஆ.1 ல் நான் சொன்ன நேரம், சொன்ன இடம், சொன்ன விதத்தில் பிரதிவாதி கையொப்பம் எதுவும் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

V R LATHA
Digitally signed by V R LATHA
Date: 2022.06.22 16:43:16 +0530

Prl.Sessions Judge,
Dindigul.